# தினசரி பயன்பாடு

கம்போஸ்டர் · நிலையான இயக்க நடைமுறை (SOP)

## 1. கழிவை அரையுங்கள்



**1 கழிவைப் பிரித்தெடுங்கள்.**

பிளாஸ்டிக், கண்ணாடி, உலோகம், உணவு அல்லாத எதையும் எடுத்துவிடுங்கள்.



**2 ஷ்ரெடரைத் தொடங்குங்கள்.**

பின்பக்க லீவரைப் பயன்படுத்துங்கள். சரியான திசையில் சுழல்கிறதா எனப் பாருங்கள்.



**3 ஹாப்பரின் பக்கவாட்டில் நில்லுங்கள்.**

அதற்கு நேர் எதிரே நிற்காதீர்கள்.



**4 ஒரு முறைக்கு 5 கிலோ மட்டும், கொஞ்சம் கொஞ்சமாகப் போடுங்கள்.**

மேல் ஹாப்பரில் போடுங்கள். முழுத் தட்டையும் ஒரே தடவையில் கொட்டாதீர்கள்.

⚠ **ஷ்ரெடர் ஓடும்போது கையை ஹாப்பருக்குள் விடாதீர்கள்.**




**5 எல்லாக் கழிவையும் போட்ட பிறகு ஷ்ரெடரை நிறுத்துங்கள்.**

## 2. ஷ்ரெடரைக் கழுவுங்கள்



**1 கிளீனிங் தட்டை உள்ளே தள்ளுங்கள்.**

பின்பக்க கிளீனிங் கதவு வழியாக.



**2** **மேலிருந்து தண்ணீர் ஊற்றுங்கள்.**

தண்ணீர் ஷ்ரெடரைக் கழுவி, தட்டில் விழும்.



**3** **தட்டை வெளியே எடுத்து, தண்ணீரைச் சாக்கடையில் ஊற்றுங்கள்.**

## 3. கம்போஸ்டிங் தொடங்குங்கள்




**1** **கொஞ்சம் நைசான மரத்தூள் போடுங்கள்.**

இன்ஸ்பெக்ஷன் கதவு வழியாக. அரைத்த கழிவு ஒவ்வொரு 30 கிலோவுக்கும் 1 கிலோ மரத்தூள்.



**2** **எல்லாக் கதவுகளையும் மூடிப் பூட்டுங்கள்.**




**3** **ஸ்கிரீனின் இரண்டாவது பக்கத்துக்குப் போங்கள்.**

முதல் பக்கத்தில் பச்சை அம்புக்குறியை அழுத்திப் பிடியுங்கள்.




**4** **Automatic mode-ஐ அழுத்திப் பிடியுங்கள்.**

டவர் விளக்கு பச்சையாகும்.



**5** **கீழே வலது பக்க அம்புக்குறியை அழுத்துங்கள்.**

இந்தப் பக்கத்தில் எல்லா விளக்கும் பச்சையா எனப் பாருங்கள். ஏதாவது பச்சை இல்லையா? எங்களை அழையுங்கள்.



**6** **இயந்திரத்தை வேலை செய்ய விடுங்கள்.**

ஒரு நாளில் 20 மணி நேரம் வரை ஓடும். தானாக நின்று, தானாக ஓடும்.

## 4. உரத்தை எடுங்கள்



**1** **ஆம்பர் (மஞ்சள்) விளக்கு வரும்வரை காத்திருங்கள்.**
ஆம்பர் என்றால் உரம் தயார்.



**2** **முன் கதவைத் திறங்கள்.**



**3** **கதவுக்கு முன்னால் ஒரு தட்டு வையுங்கள்.**



**4** **Discharge mode-ஐ அழுத்திப் பிடியுங்கள்.**
இது ஸ்கிரீனின் இரண்டாவது பக்கத்தில் உள்ளது. சுமார் 90% உரம் வெளியே வரும்.

⚠ **உரம் வெளியே வரும்போது கதவுக்குள் கையை விடாதீர்கள்.**




**5** **மீதியை உள்ளேயே விடுங்கள்.**
உள்ளே விடும் 10% அடுத்த பேட்சுக்கு உதவும்.



**6** **முன் கதவின் உள்பக்கத்தைச் சுத்தம் செய்யுங்கள்.**
உடனே செய்யுங்கள், உரம் காய்ந்து ஒட்டும் முன்.



**7** **முன் கதவை மூடிப் பூட்டுங்கள்.**

## ஷ்ரெடர் பட்டன் ஸ்கிரீனில் இருக்கிறதா?




**1** **ஸ்கிரீனின் மூன்றாவது பக்கத்துக்குப் போங்கள்.**
சில இயந்திரங்களில் ஷ்ரெடர் லீவரால் இல்லாமல் இங்கிருந்து ஓடும்.




**2** **கம்போஸ்டிங் ஓடிக்கொண்டிருக்கிறதா? முதலில் Pause composter-ஐ அழுத்துங்கள்.**



**3** **ஷ்ரெடரைத் தொடங்க ON-ஐ அழுத்துங்கள்.**
சரியான திசையில் சுழல்கிறதா எனப் பாருங்கள்.




**4** **முடிந்ததும் OFF-ஐ அழுத்துங்கள்.**
கம்போஸ்டிங் தானாக மீண்டும் தொடங்கும்.

## தெரிந்து கொள்ளுங்கள்

⚠ நாங்கள் சொல்லாமல் செட்டிங்கை மாற்றாதீர்கள்.

⚠ ஃபீடிங் அளவுக்கு மேல் கழிவை நிரப்பாதீர்கள். அது முன் கதவு வழியாகச் சிந்தும்.

⚠ கம்போஸ்டிங் அறைக்குள் தண்ணீர் ஊற்றாதீர்கள்.

⚠ இயந்திரம் ஓடும்போது கதவுகளை மூடியே வையுங்கள்.

⚠ இயந்திரம் ஓடும்போது அதை நகர்த்தாதீர்கள்.

⚠ அவசரமா? ஸ்கிரீனில் உள்ள சிவப்பு EMERGENCY பட்டனை அழுத்துங்கள்.

## டவர் விளக்கின் பொருள்



- பச்சை: கம்போஸ்டிங் நடக்கிறது.
- சிவப்பு: முன் கதவு திறந்துள்ளது.
- ஆம்பர் (மஞ்சள்): உரம் தயார்.

## என்ன இடலாம்

### ✓ இடலாம்

**அனைத்து உணவுக் கழிவுகளும்**
பழங்கள், காய்கறிகள், இறைச்சி, கோழி, மீன், ஓடுகள், எலும்புகள், பாஸ்தா, பேக்கரி பொருட்கள், சீஸ் மற்றும் முட்டை ஓடுகள்.

**உணவு படிந்த காகிதம்**
நாப்கின்கள், பேப்பர் டவல்கள், டீ பைகள் மற்றும் காபித் தூள்.

**செடிகள்**
பூக்கள், இலைகள், புல் மற்றும் சிறு கிளைகள்.

**சான்றளிக்கப்பட்ட மக்கும் பொருட்கள்**
மக்கும் பைகள் (ASTM D6400), மரக் குச்சிகள் மற்றும் சாப்ஸ்டிக்குகள்.

### ✕ இடக்கூடாது

- ✕ திரவங்கள், கிரீஸ் மற்றும் சமையல் எண்ணெய்
- ✕ பிளாஸ்டிக், தெர்மாகோல், பார்சல் டப்பாக்கள் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் கப்புகள்
- ✕ கண்ணாடி மற்றும் உலோகம்
- ✕ மெழுகுக் காகிதம் மற்றும் மெழுகு பூசிய அட்டை
- ✕ ரப்பர் பேண்டுகள், கம்பிக் கட்டுகள் மற்றும் ஸ்டிக்கர்கள்
- ✕ டயப்பர்கள்
- ✕ சான்றில்லாத 'மக்கும்' பொருட்கள்

⚠ **கண்ட்ரோல் பேனலைத் திறக்கவோ வயரிங்கைத் தொடவோ வேண்டாம். மின் அதிர்ச்சி உணர்ந்தால், உடனே மெயின் MCB-ஐ அணைத்து எங்களை அழையுங்கள்.**